**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.35/2015**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆஞ்சநேயன் | மதம் | : | இந்து |
| த/பெ | : | கோடுரு நாகிரெட்டி | ஜாதி | : | -- |
| வயது | : | 63 | கிராமம் | : | ராமலிங்காபுரம் |
| தொழில் | : | விவசாயம் | வட்டம் | : | திருத்தணி |

**07.01.2026**

**<u>பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

24. ரங்கய்யா மற்றும் நாகம்மாளுக்கு வாதி அங்கய்யா ஒரே மகன் என்றால் சரிதான். தாவா சொத்தின் பழைய புல எண்.78/1 என்றால் அது எனக்கு தெரியாது. என் சொத்தின் புல எண்.78/9 ஆகும். என் சொத்தின் புல எண்.78/9 தான் புல எண்.293/14 என்பதை ஒப்பீடு செய்ய நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. தாவா சொத்தின் புல எண்.293/15ஐ நானோ எனது முன்னோர்களோ கிரையம் வாங்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை அளவீடு செய்யும்போது தனது அறிக்கையில் புல எண்.78/9 தான் புல எண்.293/14 என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. 08.05.2007ல் கேசவ ரெட்டிக்கு நான் ஒரு சொத்தை விற்றுள்ளேன் என்றால் சரிதான். அது இந்த புல எண் இல்லை. வேறு புல எண்ணாகும்.

25. புல எண்.78/9ஐ சல்லா முனுசாமியிடம் மட்டும்தான் வாங்கியுள்ளேன் என்றாலும் அந்த புல எண்ணில் வேறு யாரிடமும் கிரையம் வாங்கவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ 5ல் நான் கேசவனுக்கு விற்ற சொத்தின் புல எண்.78/9 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அந்த புல எண்ணை விற்பனை செய்யவேயில்லை. நான் கேசவ ரெட்டிக்கு விற்ற கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்கிறேன். அது இந்த புல எண் இல்லை. வேறு புல எண்ணாகும். புல எண்.78/9க்கு எனக்கோ சல்லா முனுசாமிக்கோ இன்றைய தேதி வரை பட்டா கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

26. வா.சா.ஆ 4 ஆவணத்தில் புல எண்.293/14ன் பழைய புல எண்.78/1ப என்றுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறாக உள்ளது. அந்த தவறை சரி செய்ய நான் வட்டாட்சியரிடமோ, மாவட்ட ஆட்சியரிடமோ மனு கொடுத்து தவறை சரி செய்தேனா என்றால் இல்லை. பழைய புல எண்.78/1ப புதிய புல எண்.293ன் உட்பிரிவுகள் அனைத்தும் அரசாங்க நிலம் என்றால் அரசாங்க நிலம்தான். ஆனால் அதில்தான் அங்கய்யாவிற்கு பட்டா கொடுக்கப்பட்டது. வாதிக்கு பட்டா நான் கிரையம் வாங்குவதற்கு முன்பே கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். புல எண்.293/10ல் எனக்கு சொத்து உள்ளதா என்றால் எனக்கு அந்த புல எண் என்ன என்பது தெரியவில்லை. நான் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

27. எனது அளவே 16 அடி தான் அகலம் என்றாலும் நான் கேசவனுக்கு கிழமேல் 32 அடி வடக்கு தெற்கு 16 அடி என குறிப்பிட்டு விற்பனை செய்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. அ.வ.எண்.32/2012ன் தீர்ப்பை எதிர்த்து வாதி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.9/2025ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் வாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதை இடித்து வாதிக்கு ஒப்படைக்க வேண்டும் என்றாலும் வாதிக்கோரியப்படி பிராதுப்படி தீர்ப்பு செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)